உ
சிவமயம்
# சிவபூமி
மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi
சிவம்-06 | விசுவாசுவ வருடம் வைகாசித் திங்கள் வைகாசி -2025 | பூமி-05




## சைவ சமய நிறுவனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்

சைவ சமய நிறுவனங்கள் காலத்திற்கு காலம் பாதுகாப்பதற்கு எம்மவர்கள் எடுத்த முயற்சிகள் சொல்லில் வடிக்க முடியாது. பல சமய நிறுவனங்கள் எம்மண்ணில் தோற்றம் பெற்று பல வருடம் செயற்பட்டு பின்னால் அவை அருகிப் போய் விட்டன. யாழ்ப்பாணத்தில் பல சத்திரங்கள் மடங்கள் இருந்த இடமே இல்லாமல் அவை அழிந்து போய்விட்டன. உதாரணமாக கந்தர்மடம், மருதனார்மடம்,

ஆசிரியர்
கலாநிதி. செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன்

மாவட்ட புரத்தில் இருந்த மடங்கள், கீரிமலையில் இருந்த மடங்கள், வைத்தியலிங்க மடம், சடையம்மா மடம் , சிறாப்பர் மடம் இப்படிப் பல மடங்கள் அழிந்து போய்விட்டன. கதிர்காமத்திலும் இன்று பல மடங்கள் இவ்வாறு அழிந்து இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. செவ்வாய்க்கிழமை மடம், வெள்ளிக்கிழமை மடம், சுக்கிர வார மடம் என்று பல மடங்கள் யாழ்ப்பாணத்தில் அன்னதானம் வழங்கிய அந்த சிறப்புகள் எல்லாம் இன்று இல்லை. தற்போது சமய நிறுவனங்கள் இம்மண்ணில் செயல்படுவது என்பதை மிகவும் கடினமாக உள்ளது.

காரணம் என்னவென்றால் சைவ சமயத்தவர்களே சைவ சமய மடங்களை உதாசீனம் செய்து நிறுவனங்களை கேலிப் படுத்தி அவற்றை செயலிழக்கச் செய்வது வழக்கம். இன்று எம் மத்தியில் சில சமய நிறுவனங்கள் மிகவும் க'ட்டப்பட்டு உருவாக்கபட்டன. ஆத்மஜோதி முத்தையா, அருட்கவி விநாசித்தம்பி புலவர், பருத்துத்துறை சாரதா ஆச்சிரமத்தை நிறுவிய சுவாமி சித்துருவானந்தா,வதிரி கரவெட்டி ஆச்சிரமத்தை நிறுவிய சுவாமிகள், மகாதேவா, ஆச்சிரமத்தை நிறுவிய வடிவேல் சுவாமிகள் என்று பல அறிஞர்கள் மிகவும் முயற்சி செய்து உருவாக்கிய சமய நிறுவனங்களின் இன்றைய நிலையை எண்ணும் போது கவலை வருகிறது.

இதற்கு அடிப்படை காரணம் பற்றற்ற பிரம்மச்சாரிகளோ துறவிகளோ இப்பணிகளிலே ஈடுபடாமல் காலப்போக்கில் அவை செயலிழந்து போய்விட்டன. மேலும் ஒவ்வொரு ஊர்களில் இருந்த பல்வேறுபட்ட மடங்கள் அருகிப் போய்விட்டது. இந்நிலையில் சைவ சமயத்தவர்களே சைவ சமய நிறுவனங்களை தோற்றம் பெற்று செயல்பட்டால் அவற்றை குறை கூறி பிழைகளைக் கண்டுபிடித்து அவற்றை செயலிழக்கச் செய்கின்ற அந்த துப்பாக்கிய செயலை செய்யாதீர்கள். அந்த நிறுவனங்கள் வாழ வேண்டும் என்று பிரார்த்தியுங்கள்.

எத்தனையோ சமூகப் பிரச்சினைகளை அரசியல் பிரச்சினைகளை போர்ச்சூழல்களையும் சந்தித்துதான் இன்றைக்கு இந்நிறுவனங்கள் தொடர்ந்து செயல்படுகின்றன.

எனவே அந் நிறுவனங்களை உள்ளூரிலும் புலம்பெயர்ந்து வாழ்பவர்களும் ஏளனம் செய்து அல்லது விமர்சனம் செய்து அவற்றை செயலிழக்க செய்வீர்களேயானால் மாற்று மதத்தவர்கள் மகிழ்ச்சி அடைகின்றார்கள். இது எமது சமயத்திற்கும் அதன் எதிர்காலத்திற்கும் நல்லதல்ல. சிந்தித்து ஒற்றுமையாக செயற்படத் தயாராக வேண்டிய நேரம் இது.

**கலாநிதி. செஞ்சொற்செல்வர்**
**ஆறு. திருமுருகன்**

## நிறுவுநர் பொன். பரமானந்தர் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது



குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் பாடசாலையின் 125 ஆவது ஆண்டை நோக்கிய பயணத்தின் முக்கிய நிகழ்வாக, 30.04.2025 அன்று பாடசாலையின் நிறுவுனர் பொன்.பரமானந்தர் திருவுருவச் சிலை தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

பொன் பரமானந்தர் மகா வித்தியாலயத்தின் நிறுவுனர் அதிபர் அமரர் பொன் பரமானந்தர் அவர்களின் திருவுருவச் சிலை பேரர்களின் நிதி அனுசரணைசால் ஆக்கப்பட்டு பழைய மாணவர் சங்கத்தின் முன்னெடுப்பில் அதிபர் அவர்கள் தலைமை தாங்க திறந்து வைக்கப்பட்டது.





# நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற ஆதீன குரு முதல்வரின் நினைவு பிரார்த்தனை மற்றும் அஸ்தி பிரதிஷ்டை வைபவம்



நல்லை ஆதீனத்தில் முன்னாள் ஆதீன குரு முதல்வரின் நினைவு பிரார்த்தனை மற்றும் அஸ்தி பிரதிஷ்டை வைபவம் பக்திபூர்வமாக நடைபெற்று, பக்தர்களின் ஆழ்ந்த பிரார்த்தனையுடன் நிறைவுபெற்றது. விழா தொடக்கமாக, ஸ்நபன அபிஷேகம், முத்தமிழ்க்குருமணி நா.சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பின்னர், சித்தாந்த பண்டிதர் கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் பூஜை மற்றும் வேத பாராயண நிகழ்வுகள் நடைபெற்றன.



முக்கிய நிகழ்வாக, அஸ்தி பிரதிஷ்டை கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றது. இதில் நல்லை ஆதீனத்தின் பக்தர்கள், ஆன்மிக அறிஞர்கள் என பலரும் பங்கேற்றனர்.

இந்நிகழ்வுகள் அனைத்தும், ஆன்மிகம், மரபு, மற்றும் சைவ




சித்தாந்தப் பாரம்பரியத்தின் மரியாதையை வெளிப்படுத்தி, மறைந்த குரு முதல்வரின் தெய்வீக பணிகளுக்கு வணக்கம் செலுத்தும் விதமாக அமைந்தன.




அவருடைய பணியாற்றல், அருளுரை, மற்றும் ஆன்மிக வழிகாட்டுதல்களை நினைவுகூர்ந்த அனைவரும், இனி அவர் சித்தாந்த சத்தியத்தில் சித்தராக விளங்கும் படி பிரார்த்தனையில் கலந்துகொண்டனர்.




இந்நினைவு நிகழ்வு, நல்லை ஆதீனத்தின் மரபை சுமந்து செல்லும் வரலாற்றுப் பகுதியாகவும், பக்தர்கள் மனதில் நிலைத்திருக்கக்கூடிய ஒரு நெஞ்சரும்பும் நிகழ்வாகவும் அமைந்தது.

# பலரின் வாழ்வை ஒளியூட்டிய கருவளர்ச்சி சிகிச்சை நிலையத்தின் சேவை ஆரம்பித்து ஆண்டு ஒன்று ஆகிறது



நம் சமூகத்தில் இப்படியும் மனிதர்கள் வாழ்கிறார்களா?... என வியப்புடன் உற்று நோக்கும் வகையில், பெரிய மனம் படைத்த மனிதர்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெரிய உள்ளம் கொண்ட மனிதர்களின் தாராள மனித குணத்தின் மேன்மையால் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட சிவபூமி கரு வளர்ச்சி சிகிச்சை நிலையம் தனது முதலாம் ஆண்டு நிறைவினை 23.04.2025 கொண்டாடியது.



புகழ்பெற்ற செனற்றர் கனகநாயகம் தம்பதிகளின் மகள் வைத்திய நிபுணராக அவுஸ்ரேலியாவில் வசித்து வருகிறார். யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சுமார் 8 கோடி பெறுமதியான தனது வீட்டினை ஏதாவது தர்ம காரியத்திற்கு உபயோகப்படுத்துங்கள் என சிவபூமி அறக்கட்டளைக்கு அன்பளிப்பாக வழங்கினார்.



யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ துறை மற்றும் யாழ் போதனா வைத்தியசாலையின் நீண்ட கால கோரிக்கைக்கு அமைவாக, சிவபூமி அறக்கட்டளை யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ துறை மற்றும் யாழ் போதனா வைத்தியசாலையுடன் இணைந்து, இலவச கரு வளர்ச்சி சிகிச்சை நிலையத்தினை ஆரம்பித்து இன்று முதலாம் ஆண்டை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

அபயம் அறக்கட்டளை ஊடாக பெருமளவு நிதி இப்பாரிய அறப்பணிக்கு கிடைக்க பெற்றது. இதனூடாக அதிசிறந்த நவீன




கருவிகளையும் கொள்வனவு செய்ய முடிந்தது.


சேவை பெற வருகிறவர்களின் தரவுகளை உரிய முறையில் பாதுகாத்து மிகச் சிறந்த வைத்திய நிபுணர்களின் உதவியுடன் நிறைவான சேவையை இலவசமாக வழங்கி வருகிறது. வடமாகாணம் மட்டுமல்லாது ஏனைய மாவட்டங்களில் இருந்தும் பல ஏழை குடும்பங்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் வருகை தந்து இங்கு சேவை பெற்றுக் கொள்கிறார்கள்.




கரு வளர்ச்சி சிகிச்சை நிலையம் அமைந்துள்ள இல்லத்தை இலவசமாக வழங்கிய புகழ்பெற்ற சௌனற்றர் கனகநாயகம் தம்பதிகளின் மகள், நீண்ட இடைவேளைக்கு பின்பு இலங்கைக்கு வருகை தந்து இன்றைய நிகழ்வில் கலந்து கொண்டு இங்கு வழங்கப்படும் சேவைகளை மனதார பாராட்டியதுடன், தனது நன்கொடைக்கு நல்ல பலன் கிடைத்துள்ளதாக தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுமார் 1200ற்கு மேற்பட்ட குடும்பங்கள் நிறைவான பலன் பெற்றுள்ளமை நம் சமூகத்திற்கு கிடைத்த நல்ல செய்தியாகும். திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை காலை 7.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரையும் சனிக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரையும் இங்கு கிளினிக் நடைபெறுகிறது.

மகப்பேற்று வைத்திய நிபுணர் சரவணபவ அவர்களை ஒவ்வொரு திங்கட்கிழமையும் காலை 8.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரையும், மகப்பேற்று வைத்திய நிபுணர் ரகுராமன் அவர்களை புதன்கிழமை மதியம் 1.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரையும், மகப்பேற்று வைத்திய நிபுணர் கஜேந்திரன் அவர்களை




வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரையும், சேவை பெற விரும்புபவர்கள் சந்திக்க முடியும்.

நவீன தரத்தில் உயர் தொழில்நுட்ப வசதிகளுடன் இங்கு வழங்கப்படும் சேவைகள் அனைத்தும் இலவசம் என்பதால், பல குடும்பங்களின் வாழ்வில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதை மனதார பாராட்டியே ஆக வேண்டும்.

இதுபோன்ற சமூகப் பணிகளால் நம் சமூகம் மேலும் மேலும் உயர இன்னும் பல உதவிகளை வழங்க வேண்டும் என தன் மனம் துடிப்பதாக பெருமையாக பேசினார்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

## இதய அஞ்சலி



ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் தாயார் 92 வயதில் இறையடியில் 26.04.2025 அமைதியடைந்தார். இறுதி வழிபாடு 27.4.2025ஞாயிறு காலை7.00மணிக்கு கோப்பாய் பழம்றோட் சுப்பிரமுணிய கோட்டத்தில் நடைபெற்றது.

அன்னாரின் ஆத்மா இறை பதம் அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

# சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மாணவர்களுக்கு புத்தாண்டு கைவிசேடம் வழங்கப்பட்டது




எல்லா உயிர்களும் இறைவனின் படைப்பே என்ற எண்ணம் எந்த மனிதன் உள்ளத்தில் தோன்றுகின்றதோ அவன் மகத்துவம் பெற்ற மனிதனாக மாறிவிடுகின்றான் என்பது நம் சான்றோர்களின் வாக்கு.

பிறப்பில் ஏதோ சில குறைகளுடன் பிறந்து விட்டாலும் உள்ளத்தில் என்றும் தெய்வத்திற்கு நிகராக வாழும் நமது மாற்றுத்திறனாளிகள் என்றும் நமது உறவுகளே.









16.04.2025 சிவபூமி மனவருத்தி பாடசாலையில் கல்வி கற்கும் தெய்வக் குழந்தைகள் தங்களது தமிழ் புத்தாண்டினை கொண்டாடினார்கள். தெய்வக் குழந்தைகளுக்கு செஞ்சொற்செல்வர் கைவிஷேம் வழங்கி அவர்களை ஆசீர்வதித்தார்.

# ஆபிரகாம் லிங்கனின் புகழ்பெற்ற கடிதம்



(ஆப்ரகாம் லிங்கன் தன்னுடைய மகனின் பள்ளி ஆசிரியருக்கு எழுதிய அற்புதமான கடிதம். அனைவருமே படிக்கவேண்டிய கடிதம்)

அன்பு மிக்க ஆசிரியருக்கு,

எனது மகன் நிறைய கற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது

எல்லா மனிதர்களும் நியாயமானவர்கள் அல்ல. எல்லா மனிதர்களும் உண்மையானவர்கள் அல்ல.

ஆனால் அவனுக்கு கற்றுக்கொடுங்கள ஒவ்வொரு போக்கிரி உள்ள இடத்திலும் ஒரு வீரன் உண்டு ஒவ்வொரு சுயநலமான அரசியல்வாதி உள்ள இடத்திலும் ஒரு தன்னலம் கருதாத தலைவன் உண்டு. ஒவ்வொரு பகைவனுக்கு இடையிலும் ஒரு நண்பன் உண்டு.

இதற்குக் காலம் அதிகம் எடுத்துக் கொள்ளும் என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் உங்களால் முடியுமானால் அவனுக்கு கற்றுக் கொடுங்கள். நாம் ஈட்டியது ஒரு டாலர் என்றாலும் கண்டெடுத்த ஐந்து டாலர்களைக் காட்டிலும் அது மிகவும் மதிப்பு வாய்ந்ததாகும்.

தோல்வியை ஏற்றுக் கொள்ளவும் வெற்றியைக் கொண்டாடவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

பொறாமையிலிருந்து அவனை விலகி இருக்கச் சொல்லுங்கள்.

மனம்விட்டு சிரிப்பதன் ரகசியத்தை அவனுக்கு கற்றுக் கொடுங்கள். நயவஞ்சகர்களை எளிதில் அடையாளம் காணவும் ஆரம்பத்திலேயே அவன் கற்றுக் கொள்ளட்டும்.
புத்தகங்கள் என்ற அற்புத உலகின் வாசல்களை அவனுக்குத் திறந்து காட்டுங்கள். மேலும், வானில் பறக்கும் பறவைகளின் புதிர் மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் வேகத்தையும் பசுமையான மலையடிவார மலர்களின் வனப்பையும்

ரசிப்பதற்கு அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

பிறரை ஏமாற்றுவதை விடவும் தோல்வியடைவது எவ்வளவோ மேலானது என்பதை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். மற்றவர்கள் தவறு என்று விமர்சித்தாலும், தனது சுயசிந்தனையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொள்ள அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரடர்களிடம் கடினமாகவும் அணுகுவதற்கு அவனுக்குப் பயிற்சி அளியுங்கள்.

கும்பலோடு கும்பலாகக் கரைந்து போய் விடாமல் எந்தச் சூழ்நிலையிலும் தனது சொந்த நம்பிக்கையின்படி சுயமாகச் செயல்படும் தைரியத்தை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

எல்லா மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும். என்றாலும் அதையெல்லாம் வடிகட்டி நல்லவற்றை மட்டுமே பிரித்து எடுத்துக் கொள்ள அவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.
துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்பதை அவன் தெரிந்து கொள்ள வேண்டும்.

கண்ணீர் சிந்துவதில் தவறில்லை என்றும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

போலியான நடிப்பைக் கண்டால் எள்ளி நகையாடவும், வெற்றுப் புகழுரைகளைக் கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்குப் பயிற்சி கொடுங்கள்.

நம் திறமையையும், அறிவாற்றலையும் விற்பதில் தவறே இல்லை ஆனால் அது நமது மனசாட்சியையும் ஆன்மாவையும் பணயம் வைப்பதாக இருந்து விடக்கூடாது என்பதை அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.

பெருங்கும்பல் திரண்டு வந்து கூச்சலிட்டாலும், நியாயம் என்று தான் நினைப்பதை நிலைநாட்டுவதற்காகத் தொடர்ந்து போராடுவதற்கு அவனுக்கு நம்பிக்கை அளியுங்கள்.

அவனை அன்பாக நடத்துங்கள். ஆனால் அதிக செல்லம் கொடுத்து மற்றவர்களைச் சார்ந்திருக்க வைத்து விட வேண்டாம். ஏனென்றால் புடம் போட்ட இரும்பு மட்டுமே மிகச் சிறந்ததாக மாறுகிறது.

தவறு கண்டால் கொதித்து எழும் துணிச்சலை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். அதே வேளையில்தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். அவன் தன்மீதே மகத்தான நம்பிக்கை வைக்க வேண்டும். அப்போதுதான் மனித குலத்தின் மீது அவன் மகத்தான நம்பிக்கை கொள்வான்.

இது ஒரு மிகப் பெரிய சவால்தான் இருந்தாலும் இதில் உங்களுக்குச் முடிந்ததையெல்லாம் அவனுக்குக் கற்றுக் கொடுத்து விடுங்கள்.

அவன் மிக நல்லவன், எனது அன்பு மகன்.

ஆப்ரஹாம் லிங்கன்.

## புனித பாப்பரசர் கர்த்தருள் கலந்தார்



மதங்களை தாண்டிய மனிதம் மிக்கவராக இருந்த புனித பாப்பரசர் பிரிவு குறித்து ஆழ்ந்த அஞ்சலிகளை இலங்கைவாழ் கிறிஸ்தவ மக்களுக்கும் உலகில் உள்ள கிறிஸ்தவ மக்களுக்கும் துமி தெரிவித்துக் கொள்கிறது.

புனித பாப்பரசர் இலங்கை வந்தபோது அப்போது இந்து மாமன்ற தலைவராக இருந்த அமரர். திரு. கந்தையா நீலகண்டன் ஐயா அவர்களின் ஏற்பாட்டில் நல்லை ஆதீனத்துடனான சந்திப்பு இடம்பெற்றது.

அப்போது நல்லை ஆதீனம் மஞ்சள் நிறப் பொன்னாடை அணிவித்து புனித பாப்பரசரை கௌரவித்தமையும் அதனை அவர் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டமையும் மதங்களை தாண்டிய நல்லுறவின் அடிப்படையை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.

# ஈழத்தில் அறப்பணிகள் ஆற்றிவரும் அபயம் அறக்கட்டளை அமைப்பினர் யாழ் விஜயம்



வேலணையைச் சேர்ந்த அமரர்களான தமது பெற்றோர் விஸ்வநாதன் திலகவதி தம்பதிகள் நினைவாக சிவபூமி திருக்குறள் வளாகத்தின் மேற்தளத்தினையும் அதிலுள்ள தியான மண்டபத்தினையும் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கிய தொழிலதிபர் திரு. வ. யோகநாதன் அவர்கள் அபயம் மற்றும் சிவபூமி அறக்கட்டளைகள் ஊடாக பல அறப்பணிகளை எமது மண்ணில் செய்து வருகிறார்.





அவர் கடந்த 15.04.2025 அன்று அபயம் அறக்கட்டளை ஸ்தாபகர் வைத்தியகலாநிதி க. பார்த்தீபன் மற்றும் சிவபூமி அறக்கட்டளை ஸ்தாபகர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களுடன் மாவிட்டபுரம் திருக்குறள் வளாகத்தினை பார்வையிட்டுச் சென்றார்கள்.



அதேபோல் அவர்கள் வேலணையில் சிவபூமி மற்றும் அபயம் அறக்கட்டளையின் பணிகளை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பது தொடர்பாக கள விஜயம் மேற்கொண்டு ஆய்வு செய்தார்கள்.

ஏற்கனவே அபயம் அறக்கட்டளை வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில் முன்னெடுத்துவரும் பாரிய பணிகளை வைத்தியகலாநிதி க. பார்த்தீபன் மற்றும் தொழிலதிபர் திரு. வ. யோகநாதன் இருவரும் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# இரண்டாவது ஆண்டு நிறைவு விழா சிறப்பாக நடைபெற்றது



கண்டி கலஹா சிவபூமி ஆச்சிரமத்தில், லண்டன் அபயம் அறக்கட்டளை உதவியுடன் நடை பெற்ற இலவச கல்வி வழங்கல் திட்டத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா மிகுந்த வெகு விமரிசையாக மற்றும் ஆனந்தமிகு சூழலில் நடைபெற்று முடிந்தது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமப்புறக் குழந்தைகளுக்கு தரமான கல்வியை இலவசமாக வழங்கி, அவர்களின் எதிர்காலத்தைப் படைக்க உதவுவதாகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இத்திட்டத்தின் பயனை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



விழாவில், அபயம் அறக்கட்டளை ஸ்தாபகரும், புகழ்பெற்ற வைத்திய நிபுணருமான டாக்டர் க. பார்த்தீபன் அவர்கள் சிறப்புரையாற்றினார். கல்வியின் முக்கியத்துவம், சமுதாய முன்னேற்றத்தில் அதன் பங்கு, மற்றும் எதிர்கால தேவை பற்றிய அவதானங்களை பகிர்ந்த அவர், இந்த திட்டம் தொடரட்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

இதேபோல், பெருந்தொகை நன்கொடை வழங்கிய தொழிலதிபர் திரு. யோகநாதன் அவர்களும் விழாவில் கலந்து கொண்டு மாணவர்களை ஊக்குவித்தார். அவர்களின் முன்னிலை,





மாணவர்களிடையே உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியது.

இவ்விழாவிற்கு மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக சேவையாளர்கள் மற்றும் அண்டை கிராமங்களைச் சேர்ந்தோர் சிறப்பாக பங்கேற்றனர். இவ்வாறு நடைபெற்ற இந்த விழா, கல்வி தான் சமுதாயத்தின் வலிமையான கருவி என்பதை மீண்டும் ஒருமுறை உணர்த்திய நிகழ்வாக அமைந்தது.

## ஆத்ம சாந்தி பிரார்த்தனை



எமது சிவபூமி அறக்கட்டளையின் முன்னாள் உறுப்பினர் திரு.ஏ.சி.சண்முகலிங்கம்

(இளைப்பாறிய உப அதிபர்) தனது 80வது வயதில் காலமானார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரத்திப்பதோடு அன்னரின் குடும்பத்தினருக்கு அழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்

# வட்டுக்கோட்டை சிவபூமி திருவாசக மடத்தில் பக்தி பூர்வமாக நிகழ்ந்த திருவாசக முற்றோதல் நிகழ்வு



சித்திரை மாதத்தின் இறுதி சனிக்கிழமையன்று, சிவபூமி தேவாரமடத்தில் ஆன்மீகமும் இறைவணர்வும் நிரம்பிய ஒரு புனித நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. திருவாசக முற்றோதல் ஆரம்பமானது. அடியார்கள் ஒருங்கிணைந்து திருவாசகப் பாடல்களை முழு பக்தியோடு ஓதினார்கள்.

திருவாசகத்தில் உள்ள ஒவ்வொரு பாடலும், இறைவனது கருணையைப் பறைசாற்றி, கலந்து கொண்டவர்களின் மனதினை ஆனந்தத் துளிர்ப்பூத்ததாகவும், ஒரு பரவச நிலையை ஏற்படுத்தியதாகவும் அமைந்தது. திருவாசக முற்றோதலைத் தொடர்ந்து, மகேஸ்வர பூசை மிகுந்த பக்தி பரவசத்துடன் நடைபெற்றது.



# மாவிட்டபுரம் சிவபூமி வளாகத்திற்கு மேலும் வந்து சேர்ந்த மொழிபெயர்ப்பு நூல்கள்



தமிழ் மொழியின் மரபுக்கன்மையாகவும், உலகெங்கும் ஒளிரும் ஆன்மிக வாழ்வியல் நூலாகவும் விளங்கும் திருக்குறள், தற்போது மேலும் பரவலாகப் பல மொழிகளில் மக்களிடம் சென்றடையும் வகையில் ஒரு முக்கிய முன்னேற்றம் இடம்பெற்றுள்ளது.

முனைவர் இரா. மாது அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் நித்ய உழைப்பின் பயனாக, திருக்குறளின் 27 பிறமொழி மொழிபெயர்ப்பு நூல்கள், மாவிட்டபுரம் சிவபூமி திருக்குறள் வளாகத்துக்கு கிடைத்துள்ளது. .



இந்த நூல்கள் மூலம், திருக்குறளில் உள்ள மானுட உணர்வுகள், நெறிமுறைகள், அரசியல் ஆய்வுகள் மற்றும் ஆன்மிக தத்துவங்கள் உலகம் முழுவதும் உள்ள பிறமொழி வாசகர்களுக்கும் எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடியவையாக மாறுகின்றன. இவை, மொழியினைத் தாண்டி மனிதத்துவத்தின் பொதுவான சிந்தனைகளைப் பரப்புகின்றன.



மாவிட்டபுரம் சிவபூமி வளாகத்தில் இந்நூல்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் மூலம், அந்த இடம் ஒரு கலாசார நூலக மையமாகவும், அறிவுத்திறன் வளர்த்தலுக்கான புனிதப் பிரதேசமாகவும் திகழ்கின்றது. இந்த முயற்சிக்கு வலுசேர்த்த முனைவர் இரா. மாது அவர்களுக்கு இதயம் கனிந்த பாராட்டுகள்.

இது போன்ற பணி, தமிழறிவை உலகறிவாக மாற்றும் முயற்சிகளில் ஒரு தொன்மையான அடையாளமாக நிச்சயம் இருக்கும்.

# அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் 78ஆவது பிறந்தநாள்



அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவராகவும், சட்டத்துறையில் நுட்பமான ஞானத்துடன் பணியாற்றிய சிறந்த நிபுணராகவும் புகழ் பெற்றிருந்த அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் 78ஆவது பிறந்தநாள் கடந்த 2025 ஏப்ரல் 16ஆம் தேதி, ஈழத்திருநாட்டின் பல்வேறு பகுதிகளில் சைவ மக்களால் கொண்டாடப்பட்டது.

சமயம், சமூகம் மற்றும் நீதியின் நெறியெழுச்சிக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர் நீலகண்டன் அவர்கள். சைவ சமயத்தின் வளர்ச்சிக்காகவும், தமிழ் சமூக உரிமைக்காகவும் இவர் செய்த தன்னலமற்ற பணிகள் இன்னும் எளிமையாய் சுடர்விடுகின்றன.

தற்துணிவும், தூய்மையும், தன்னலமற்ற சமூக சேவையும் இவரது வாழ்க்கையின் ஒவ்வொரு படியாக இருந்தன.

நம் சமயத்திற்கும் சமூகத்திற்கும் தீவிரமாக பாடுபட்ட இந்த மகான், இப்போது நம்மிடையே இல்லையெனினும், அவரது எண்ணங்களும் செயற்பாடுகளும் நமக்குள் என்றும் உயிர் வாழ்கின்றன.

அவரை நினைவில் வைக்கவும், அவரின் சேவையை வார்த்தைகளிலும் செயலில் மேலும் பரவச்செய்வதும் நம் எதிர்காலப் பரம்பரைக்கு நல்வழிகாட்டும் ஒளியாக அமையும்.

# ஆரம்பமானது கதிர்காம பாத யாத்திரை




நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க கதிர்காமம் பாதயாத்திரை, இவ்வாண்டும் பக்தி வெள்ளத்துடன் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளுடன் பெருமிதமாக ஆரம்பமானது.



சந்நிதியிலிருந்து ஆரம்பித்த இந்த யாத்திரை, வடக்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களைக் கடந்து, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகல ஆகிய மாவட்டங்கள் வழியாக 815 கிலோமீற்றர் தூ ரம் 46 நாள்கள் நடைப்பயணமாக மேற்கொள்ளப்படுகிறது.



அந்தந்த இடங்களில் பக்தர்கள் யாத்திரையினரை வரவேற்று சேவை செய்யும் பண்பாடும், இந்த பாதயாத்திரையின் சமூகத் தூய்மையையும் பன்முக மத ஒற்றுமையையும் வெளிக்காட்டுகின்றன.



சந்நிதியான் ஆச்சிரமத்தில் சிறப்பு பூசைகள் நடைபெற்றதுடன், பக்தர்களுக்கு உணவும் வழங்கப்பட்டது. ஆச்சிரம சுவாமிகள் வழங்கிய ஆசீர்வாதத்துடன் யாத்திரை மகிழ்வுடனும், மன உறுதியுடனும் ஆரம்பமானது.



இந்த ஆன்மிகப் பயணத்தின் உச்சமாக கதிர்காமம் முருகன்



ஆலய கொடியேற்ற விழா எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஜூன் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. இவ்விழா, பல ஆயிரக்கணக்கான பக்தர்களை ஒன்றிணைக்கும் முக்கிய ஆன்மிக நிகழ்வாக அமைந்துள்ளது.

இந்த பாதயாத்திரை, சைவ சமயத்தின் உயிர்நாடியாக மட்டுமல்லாமல், பக்தி, பொறுமை, உறுதி, மற்றும் தன்னலமற்ற சேவையின் நடைமுறை பாடமாகவும் விளங்குகின்றது. இந்த வலிமையான பாரம்பரியப் பாதையில் திரள் பக்தர்கள் கலந்துகொள்வது, எமது சைவ மரபை தொடரும் உறுதியையும், ஆன்மிக எழுச்சியையும் வெளிக்காட்டுகிறது.



# வழக்கம்பரையில் இன்றும் நின்று நிலைக்கும் விடி விளக்கு




மின்சாரம் இல்லாத அன்றைய காலப்பகுதியில் பிரதான வீதிகளில் (சந்திகளில்) இவ்வாறான விடி விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கும். இரவில் பயணிப்போருக்கு இது பெரும் உதவியாக இருந்தது. தூ ரநோக்கு சிந்தனை உள்ளவர்களால் இப்படியான விளக்குகள் அன்றைய காலத்தில் அமைக்கப்பட்டது.

அன்றைய காலத்தில் மாலைப்பொழுதில் இதற்குள் இருக்கும் விளக்கு ஏற்றப்படும். அந்த விளக்கு இரவு முழுவதும் ஒளிரும். காற்று, மழை என்பவற்றால் அணையாதவாறு பாதுகாப்பாக அந்த விளக்கு கண்ணாடி போன்ற கூட்டிற்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும். அடுத்த நாள் காலைப்பொழுதில் இவ்விளக்கு அணைக்கப்படும்.

இரவு ஒளிரும் விளக்கு வீதியால் பயணிப்போருக்கு அன்றைய காலத்தில் பேருதவியாக இருந்தது. வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானத்திற்கு முன்பதாக அன்றைய காலத்தில் இதனை அமைத்தவர் பண்ணாகத்தை சேர்ந்த கனகர் என அறியப்பட்ட அமரத்துவமடைந்த கனகசபை அவர்கள்.

அவர் அதனை அமைத்ததோடு மாலைப்பொழுதில் தினமும் விளக்கேற்றி வந்தார். அவர் அமரத்துவமடைய அவரது பணியை அவரது மகன் சாமி என அறியப்பட்ட தவராசா தொடர்ந்தார்.

கால மாற்றத்தால் மின்சாரப்பாவணை வந்ததால் விடிவிளக்கின் தேவைப்பாடு இல்லாது போனது. அதுவும் பழுதடைந்து போனது. தனது பேரனார் அமைத்தது நினைவு சின்னமாக தொடர்ந்து வழக்கம்பரையில் இருக்க வேண்டும் என்று எண்ணிய கனகரின் பேரன் திலீபன் அதனை தற்போது புனரமைத்துள்ளார். காலமாற்றத்திலும் விடிவிளக்கு நினைவுச்சின்னமாக இந்த மண்ணில் நின்று நிலைக்கட்டும்!


அபயம்
இரகசியம் பேணும்
இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை
071 071 2345
மனநெருக்கீடுகளில்
இருப்பவர்களுக்கு உடனடி தொலைபேசி
வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை
துறை சார் மருத்துவர்களும் ,
குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி
தீர்வு காண்பதற்கு / வழிகாட்டுவதற்கு
தயாராக உள்ளனர் .
ஒரு நாளில் (24 மணி நேர இரவு பகல் சேவை)
எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக
தொடர்பு கொள்ளலாம்
மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை
காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையை
பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.
தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் அனைத்தும்
இரகசியமாக பேணப்படும்
ABAYAM
அபயம் - கல்வி மற்றும் உடல் நலம் சார்ந்த அறக்கட்டளை அமைப்பு

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்தர மாணவர் புகுமுக நிகழ்வு நடைபெற்றது



யாழ்ப்பாணத்தின் முன்னணி பாடசாலையான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில், 2025 ஆம் ஆண்டுக்கான உயர்தர புகுமுக நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வின் முக்கிய அம்சமாக, செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் மாணவர்களுக்கு சிறப்புரை வழங்கினார். புதிய வகுப்பு மாணவர்களுக்கு இது ஒரு வழிகாட்டல் நிகழ்வாக அமைந்தது.

கல்வி பயணத்தின் புதிய கட்டத்திற்கு கால் வைக்கும் மாணவர்களுக்கு, உயர்தரத்தில் எதிர்நோக்கும் சவால்கள், காலநிர்வாகம், பாடநெறிகளுக்கான அணுகுமுறை மற்றும் உயர் கல்விக்கான பாதைகள் போன்றவை தெளிவாக விளக்கப்பட்டன.






மாணவர்களின் மனதில் உறுதியும் உற்சாகமும் விதைக்கும் வகையில், நிகழ்வு அமைந்தது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மேலும் ஒரு அரிய கல்வி நிகழ்வை வெற்றிகரமாக நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு சிவபூமி சிவனடியார் நிலையத்தில் சித்திரை பௌர்ணமி பூசை விழா பக்தி பூர்வமாக இடம்பெற்றது



கொழும்பு சிவபூமி சிவனடியார் நிலையத்தில் 2025 மே 12ஆம் தேதி, சித்திரை பௌர்ணமி நாளை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் மற்றும் ஆன்மிக நிகழ்வுகள் மிகவும் பக்தி மற்றும் புனிதத்துடன் நடத்தப்பட்டன. அன்றைய தினம் காலையில் பூசை வழிபாடுகள், வேத பாராயணங்கள், தேவாரப்பாடல்கள் என நிகழ்வுகள் தொடர்ந்தன. பக்தர்கள் தங்களது விரதங்கள் மற்றும் பிரார்த்தனைகளுடன் நிகழ்வுகளில் கலந்துகொண்டு, ஆன்மிக திருப்தியடைந்தனர்.



இந்நாளின் சிறப்பு நிகழ்வாக, பூசைகளுக்கு பின் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. அதனூடாக, சமூக ஒற்றுமை மற்றும் பக்தி உணர்வை ஊக்குவிக்கும் முகமாக, அனைவரும் சமத்துவ உணவாக அன்னம் பெற்றனர்.



சித்திரை பௌர்ணமி விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்த சிவபூமி சிவனடியார் நிலைய நிர்வாகத்தினர், தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்களின் அர்ப்பணிப்பும், பக்தர்களின் திரளான வருகையும், நிகழ்வை சிறப்பாக அமைத்தன.

இந்நிகழ்வு, சிவபக்திக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஆன்மிக நிகழ்வாக, பக்தர்களின் மனங்களில் நீங்கா பதிவாகியுள்ளது. மேலும் இவ்வாறான ஆன்மிக நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற, பக்தர்கள் எதிர்பார்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(வைகாசி-2025) ISBN-978-955-7420-00-4